## சுருக்கம்

உயர்கல்வி – தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்களை சென்னை, மதுரை மற்றும் தருமபுரி ஆகிய மூன்று இடங்களில் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

### உயர்கல்வித் (கே1) துறை

அரசாணை (நிலை) எண். 109

நாள். 25.6.2013
விஜய, ஆனி 11
திருவள்ளுவர் ஆண்டு 2044

1. அரசு ஆணை (நிலை) எண். 70, உயர்கல்வித் (கே.1) துறை, நாள். 18.5.2012
2. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 4.4.2013 அன்று வெளியிட்ட அறிவிப்பு
3. அரசு கடித எண். 6772/கே.1/2013–1, நாள். 22.4.2013
4. தமிழ் நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பதிவாளரின் கடித எண். த.நி.ப. கழகம்/நி/27/2013, நாள். 6.5.2013.

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பணிகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டு 2012–13ஆம் ஆண்டு உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் செய்யப்பட்ட அறிவிப்பின்படி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்கள் திருச்சி–ஸ்ரீரங்கத்திலும் மற்றும் கோயம்புத்தூரிலும் ஏற்படுத்தப்பட்டன.

2. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 4.4.2013 அன்று நடைபெற்ற உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது சட்டப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

“2012–2013ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் சேர்க்கையினைக் கருத்தில் கொண்டு, அவர்களின் கற்றல் தேவையை நிறைவேற்றி, ஊக்கப்படுத்தும் வகையில், ஸ்ரீரங்கம் மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு மையங்கள் நிறுவப்பட்டன. தற்போது மாணவர்களின் சேர்க்கை மேலும் அதிகரிக்கும் என்ற நிலையில், மாணவர்களின் கற்றல் தேவைக்காக மூன்று மண்டல மையங்களை சென்னை, மதுரை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் ரூ. 65.15 இலட்சம் செலவில் அமைப்பதன் மூலம், மாணவர்கள் திறந்தநிலை பல்கலைக்கழக தலைமையிடத்தை அணுக வேண்டிய நிலை தவிர்க்கப்படும்”.

3. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சட்டம் இயற்றித் தொடங்கப்பட்டது எனவும் "எல்லோருக்கும் எப்போதும் கல்வி" என்ற இலக்கில் அனைவருக்கும் எளிதில் உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது எனவும், 2004ஆம் ஆண்டு 14 படிப்புகள், பதினான்காயிரம் மாணவர்கள் என்ற நிலையில் செயல்படத் தொடங்கிய இப்பல்கலைக்கழகம் தற்போது 103 படிப்புகள் ஏறத்தாழ 5 இலட்சம் மாணவர்கள் என்ற நிலையை எட்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மாணவர்களின் சேர்க்கையினைக் கருத்தில் கொண்டு, அவர்களின் கற்றல் தேவையை நிறைவேற்றி, ஊக்கப்படுத்தும் வகையில், மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அமைக்கப்பட்டதைப் போன்றே திருச்சி–ஸ்ரீரங்கம் மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு மையங்கள் நிறுவப்பட்டன. 2013–2014–ல் ஆண்டில் மாணவர்களின் கற்றல் தேவைக்காக மூன்று மண்டல மையங்களை சென்னை, மதுரை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் ரூ. 65.15 இலட்சம் செலவில் அமைப்பதற்கு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பதிவாளரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனைச் செய்தது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக மண்டல மையங்களை சென்னை, மதுரை மற்றும் தருமபுரி ஆகிய மூன்று இடங்களில் ரூ.65,16,000/– (ரூபாய் அறுபத்தி ஐந்து இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) செலவில் இணைப்பில் கூறப்பட்டுள்ளவாறு அமைக்கவும் அச்செலவினத்தை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகமே தனது சொந்த நிதி ஆதாரங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.32625/Edn-I/13, நாள்.21.06.2013–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
துணைவேந்தர் / பதிவாளர் / நிதி அலுவலர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை–15
மாநில கணக்காயர், சென்னை–18
சம்பள மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35
உயர்கல்வி (ஏ) துறை, சென்னை–9
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை, சென்னை–9
நிதித் (கல்வி–I) துறை, சென்னை–9
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

து. நந்தினி 26/6/2013
பிரிவு அலுவலர்
26/6/013

அரசாணை (நிலை) எண்.109, உயர்கல்வித் (கே.1) துறை, நாள். 25.6.2013 இன் இணைப்பு

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்களை சென்னை, மதுரை, தருமபுரி ஆகிய இடங்களில் அமைப்பதற்கான செலவின விவரம்:

| வ.எண் | விவரங்கள் | செலவு (ரூ) |
|---|---|---|
| அ | பணியாளர்களின் ஊதியம் | |
| (i) | ஒருங்கிணைப்பாளர் ஊதியம் (ரூ. 35000 x 1x3x12) | 12,60,000.00 |
| (ii) | துணை ஒருங்கிணைப்பாளர் ஊதியம் (ரூ. 20,000x2x3x12) | 14,40,000.00 |
| (iii) | கணிப்பொறி பகுப்பாளர் (ரூ. 8000x1x3x12) | 2,88,000.00 |
| (iv) | விவரப் பதிவு இயக்கர் (ரூ. 4000x2x3x12) | 2,88,000.00 |
| (v) | அலுவலக உதவியாளர் (ரூ. 3000x1x3x12) | 1,08,000.00 |
| | **சம்பளத் தொகுப்பு** | 33,84,000.00 |
| ஆ | பராமரிப்பு | |
| (i) | வாடகை (10,000 sq.ft) (ரூ.30,000x3x12) | 10,80,000.00 |
| (ii) | தண்ணீர் மற்றும் மின்சாரப் பயன்பாடு (ரூ. 5000x3x12) | 1,80,000.00 |
| (iii) | தொலைபேசி மற்றும் இணையதள வசதி (ரூ. 1000x3x12) | 36,000.00 |
| (iv) | அலுவலக உபயோகப் பொருட்கள் (ரூ. 1000x3x12) | 36,000.00 |
| **(ஆ) பராமரிப்புச் செலவினங்கள்** | | 13,32,000.00 |
| இ | உள்கட்டமைப்பு வசதிகள் | |
| (i) | உள்கட்டமைப்பு வசதிகள் (தொலைபேசி, தொலைநகல், கணினி, பிரிண்டர், நகல் எடுக்கும் இயந்திரம், நாற்காலி மற்றும் மேசை, கணினி தொடர்புடைய இதர பொருட்கள் (ரூ. 6,00,000x3) | 18,00,000.00 |
| **(இ) உள்கட்டமைப்பு வசதிகளுக்கான செலவினங்கள்** | | 18,00,000.00 |
| மொத்தச் செலவினங்கள் (அ) + (ஆ) + (இ) | | 65,16,000.00 |

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

கு. நந்தினி
26/6/2013
பிரிவு அலுவலர்

26/6/13